# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082863

1. District மாவட்டம்: அரியலூர் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 3/2023 Date நாள்: 27.6.2023.

2. (i) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 468, 471, 477(A) and 201 IPC
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act (as amended in 2018) -1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a) of PC
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act-1988 (as amended in 2018)
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்: —

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் Date from: நாள் முதல் 2018 Date to: நாள் வரை 2020.
   Time Period: நேர அளவு Time from: நேரம் முதல் Time to: நேரம் வரை
   (b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.6.2023 Time நேரம்: 11.00 Hrs.
   (c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.6.2023 Time நேரம்: 11.00 Hrs

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை ✓எழுத்து மூலம் / வாய் மொழியாக ஊ.த.க.பிரிவு ரகசிய விசாரணை தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30 கி.மீ - கிழக்கு
   Beat Number: முறைக் காவல் எண் (b) Address: முகவரி பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District: மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. சந்திரசேகர் (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality: நாட்டினம் இந்தியன் (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue: வழங்கப்பட்ட நாள் Place of Issue: வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation: தொழில் துணைக் காவல் கண்காணிப்பாளர் (g) Address: முகவரி ஊ.த.க.பிரிவு, அரியலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள். (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திரு. K. சாமிநாதசெல்வம் த/பெ இருதையமூர்த்தி இடைநிலை காப்பாளர் (2) திரு. மு. செல்வராஜ் த/பெ. முத்துப்பிள்ளை இடைநிலை காப்பாளர் (3) திரு. மை. ஜான்சன் ரெசின் த/பெ மைக்கேல்ராஜ், காப்பாளர். எதிரிகள் மூவரும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, உடையார்பாளையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   முதற்கட்ட விசாரணை செய்து இயக்குநர் ஊ.த.க.பிரிவு சென்னை அவர்களுக்கு அறிக்கை அனுப்பி, அவர்களின் உத்தரவின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Separate Typed sheet attached —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed திருமதி. ரெ. சுந்தரா Rank ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................on point of jurisdiction ஊ.த.க. மற்றும் அரியலூர்.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 27/6/2023.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
Suomotto

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. சந்திரசேகர்
Rank: நிலை D.SP./V&AC/Ariyalur No. எண் ..........

முதல் தகவல் அறிக்கை கு.எண்.03/2023-ன் தொடர்ச்சி

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

27.06.2023ம் தேதி 11.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது PE27/2022/BCW/ARL நாள்: 16-06-2023ன்படி இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களிடமிருந்து வரப்பட்ட உத்தரவுப்படி முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு,

1.-ம் எதிரி திரு.K.சாமிநாதசெல்வம், இடைநிலை காப்பாளர், உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் 01.03.2018 முதல் 22.09.2018 வரை இடைநிலை காப்பாளராக பணிபுரிந்துள்ளார். தற்போது அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் இடைநிலை காப்பாளராக பணிபுரிந்து வருகிறார்.

2-ம் எதிரி திரு. மு.செல்வராஜ், இடைநிலை காப்பாளர், உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் 23.09.2018 முதல் 30.06.2019 வரை இடைநிலை காப்பாளராக பணிபுரிந்துள்ளார். அரியலூர் மாவட்டம், செந்துறை, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் இடைநிலை காப்பாளராக இருந்தவர் தற்போது தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளார்.

3-ம் எதிரி திரு. மை.பிரான்சிஸ் ரெசிஸ், காப்பாளர், உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் 01.07.2019 முதல் 06.02.2020 வரை காப்பாளராக பணிபுரிந்துள்ளார். தற்போது அரியலூர் மாவட்டம், மேலணிக்குழி பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் காப்பாளராக பணிபுரிந்து வருகிறார். இவர்கள் மூவரும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2 (c)-ன்படி பொது ஊழியராவார்கள்.

அரியலூர் மாவட்டம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களின் கடித எண்.ந.க.பா1/2366539/2021, நாள்:16.05.2022ன்படி முன் அனுமதி பெற்று முதனிலை விசாரணை 67/2022/BCW/ARL தொடங்கப்பட்டு விசாரணையில் குற்ற அலுவர்கள் மூவரும் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் 2018-2019-ம் கல்வி ஆண்டில் 50 மாணவர்களும், 2019-2020-ம் கல்வி ஆண்டில் 15 மாணவர்களும் விடுதியில் தங்கி படித்தது போன்று பொய்யான கணக்கு காண்பித்து அரசு அங்காடியில் பொருட்களை வாங்கி அதனை

<u>முதல் தகவல் அறிக்கை கு.எண்.03/2023-ன் தொடர்ச்சி</u>

வெளிச்சந்தையில் விற்றும், இதர செலவுகள் செய்யாமலேயே செலவு செய்தது போல் பொய்யான கணக்கு காண்பித்தும், அரசு பணம் ரூ.3,08,742/-ஐ கையாடல் செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி சுய லாபம் அடைந்துள்ளார்கள்.

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் பள்ளி விடுமுறை விடப்பட்டு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு ஆண்டு தேர்வு முடிந்து செல்லும் மாணவர்களுக்கு பதிலாக புதிதாக சேரும் மாணவர்களை சேர்க்கும் போது விடுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட மாணவர்களுக்கு மிகாமல் தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்படவேண்டும். அந்த தேர்வுக்குழுவில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நல அலுவலர் அவர்கள் தலைவராகவும், சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் இணை உறுப்பினராகவும், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய தலைவர்/நகராட்சி தலைவர்/ஊராட்சி மன்ற தலைவர்கள் உறுப்பினர்களாகவும், விடுதி அமைந்துள்ள பகுதியில் சமூக பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வலர்கள் இரண்டு நபர்கள் உறுப்பினர்களாகவும் இருந்து மாணவர்களை தேர்வு செய்வார்கள். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களை தேர்வு செய்யும் போது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 60%-ம், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு 20%-ம், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் 15% மற்றும் இதர வகுப்பினருக்கு 5%-ம் என்ற அடிப்படையில் தேர்வு செய்யப்பட வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யப்படும் மாணவர்களை விடுதியில் தங்கி படிக்க அனுமதித்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு அனுப்பிவைக்கப்படும் பட்டியலை விடுதி காப்பாளர், விடுதியின் தகவல் பலகையில் ஒட்டிவைக்க வேண்டும், அதன் பின்னர் மாணவர்கள் விடுதியில் சேர்ந்ததும் அதன் விபரத்தினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்நல அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியை (ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு 15 கிலோ வீதம்) ஜெயங்கொண்டத்தில் உள்ள நுகர்பொருள் வாணிப கழக அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். உணவு வழங்குவதற்கு தேவையான மளிகை பொருட்கள் அனைத்தும் ஜெயங்கொண்டத்தில் உள்ள பெரம்பலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் வாங்கிக்கொள்ள வேண்டும். அதற்கான பட்டியல் தொகை அந்நிறுவனத்திற்கே காசாக்கம் செய்து வழங்கப்படும். மேற்படி பண்டகசாலையில் கிடைக்காத இதர மளிகை பொருட்களான, காய்கறிகள், சிக்கன், மட்டன்,

முதல் தகவல் அறிக்கை கு.எண்.03/2023-ன் தொடர்ச்சி

முட்டை, பால் மற்றும் இதர பொருட்களை விடுதி காப்பாளர்கள் தங்களது சொந்த பணத்திலிருந்து வெளிச்சந்தையில் கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். அதற்கான உரிய ரசீதுகளை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தால், அவர்கள் மேற்படி ரசீதுகளுக்கான தொகையினை காசாக்கம் செய்து, விடுதி வங்கி கணக்கில் வரவு வைப்பார்கள். அந்த பணத்தினை வங்கியிலிருந்து விடுதி காப்பாளர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1,2,3, வரையிலான எதிரிகள் மேற்கண்ட நடைமுறைகள் எதையும் பின்பற்றாமல் அரசு பணத்தை கையாடல் செய்யும் நோக்கில் செயல்பட்டுள்ளார்கள். அதன்படி

1-ம் எதிரி திரு.சாமிநாதசெல்வம் ஏப்ரல் 2018 முதல் செப்டம்பர் 2018 வரை உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் காப்பாளராக பணிபுரிந்த காலத்தில் மாணவர்களுக்கு காலை உணவு மற்றும் இரவு உணவு வழங்கியதாக பொய் கணக்கு காண்பித்து கையாடல் செய்ததன் மூலம் ரூ.1,07,370/- அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

2-ம் எதிரி திரு.செல்வராஜ் அக்டோபர் 2018 முதல் ஜூன் 2019 வரை உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் காப்பாளராக பணிபுரிந்த காலத்தில் மாணவர்களுக்கு காலை உணவு மற்றும் இரவு உணவு வழங்கியதாக பொய் கணக்கு காண்பித்து கையாடல் செய்ததன் மூலம் ரூ.1,81,876/- அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

3-ம் எதிரி திரு.பிரான்சிஸ் ரெஜிஸ் ஜூலை 2019 முதல் பிப்ரவரி 2020 வரை உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் பணிபுரிந்த காலத்தில் போது 07/2019 மாதத்தில் மாணவர்களுக்கு காலை உணவு மற்றும் இரவு உணவு வழங்கியதாக பொய் கணக்கு காண்பித்து கையாடல் செய்ததன் மூலம் ரூ.19,496/- அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

மேலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் விடுதியை ஆய்வு செய்ததன் மூலம் பொய் கணக்கு காண்பித்து கையாடல் செய்தது தெரியவந்து, குறிப்பாணை வழங்கி 08/2019 மற்றும் 09/2019 மாதங்களுக்கான ரசீதுகள் திருப்பப்பட்டுள்ளது. ஆனால், சந்தேக அலுவலர்-3 தொடர்ந்து 02/2020 வரை மூன்று வேளையும் மாணவர்களுக்கு உணவு வழங்கியதாக சராசரி பதிவேடு, வருகை பதிவேடு, பொருள் இருப்பு பதிவேடுகள் ஆகியவைகளில் பொய்யான கணக்கு காண்பித்துள்ளார். மேலும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் விடுதிக்காக மளிகை பொருட்கள் கொள்முதல் செய்ததாக பெறப்பட்ட ரசீதுகளின் அசலை காசாக்கம் செய்ய மாவட்ட

முதல் தகவல் அறிக்கை கு.எண்.03/2023-ன் தொடர்ச்சி

அலுவலகத்திற்கு அனுப்பி வைக்காமல், தன் வசம் வைத்திருந்துள்ளார் என்பது விசாரணையின்போது சமர்ப்பித்த ஆவணங்களை பார்வையிட்டதில் தெரியவருகிறது. மேலும், விடுதியில் உள்ள 2019-20 ஆம் ஆண்டிற்கான உயர் அதிகாரிகள் ஆய்வு பதிவேட்டை மறைத்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

| சந்தேக அலுவலர்களின் பெயர்கள் | பணிபுரிந்த காலம் | உணவு வழங்கப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை | செலவு செய்ததாக காசாக்கம் செய்யப்பட்ட மொத்த தொகை (ரூபாய்) | மதிய உணவு வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | சராசரி பதிவேட்டின்படி மதிய உணவுக்கான தொகை (ரூபாய்) | கையாடல் செய்ததன் மூலம் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| திரு.சாமிநாதசெல்வம் | 04/2018 to 09/2018 | 16599 | 161804 | 5584 | 54434 | 107370 |
| திரு.செல்வராஜ் | 10/2018 to 06/2019 | 27311 | 275092 | 9254 | 93216 | 181876 |
| திரு.பிரான்சிஸ் ரெஜிஸ் | 07/2019 to 02/2020 | 2910 | 29246 | 970 | 9750 | 19496 |
| Total | - | - | 4,66,142 | - | 157400 | 308742 |

மேற்படி குற்ற அலுவலர்கள் மூவரும் அரசு அலுவலர்களாக இருந்து கொண்டு, நேர்மையற்ற முறையில் அரசு பணத்தை கையாடல் செய்யும் நோக்கில், முறையான அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும், செயல்முறை திட்ட நடவடிக்கைகளை முறையாக பின்பற்றாமலும், அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் 2018-2019-ம் கல்வி ஆண்டில் 50 மாணவர்களும், 2019-2020-ம் கல்வி ஆண்டில் 15 மாணவர்களும் (31 மாணவர்களிலிருந்து 15 ஆக குறைத்து) விடுதியில் தங்கி படித்தது போன்று பதிவேடுகளை தயார் செய்தும், விடுதியில் தங்கிப் படிக்காத மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியதாகவும், காலை மற்றும் இரவு வேளையில் உணவு வழங்காமலேயே உணவு வழங்கியது போல் பொய்யான கணக்கு காண்பித்தும், அரசு அங்காடியில் பொருட்களை கொள்முதல் செய்து, அதனை முறையாக மாணவர்களுக்கு உணவு வழங்க பயன்படுத்தாமல், பொய்யான ஆவணங்களை தயார் செய்தும், அதை உண்மையென பயன்படுத்தியும், செலவு செய்யாமலேயே செலவு செய்ததுபோல் பொய் கணக்கு காட்டி, அரசு

<u>முதல் தகவல் அறிக்கை கு.எண்.03/2023-ன் தொடர்ச்சி</u>

பணம் ரூபாய் 3,08,742/-ஐ கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய குற்றத்தை புரிந்துள்ளார்கள்.

எனவே, மேற்படி குற்ற அலுவலர்கள் மீது அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03/2023, u/s 468, 471, 477(A) and 201 IPC மற்றும் 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018)-ன்படி 27.06.2023 தேதி 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர்/சிறப்பு நீதிபதி அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

27/6/2023

DSP/V&AC/Ari.